ரவர்கள் தெரிவிக்கவில்லை. அந்தப் பகுதிகள் அதிகமாகப் பாதிக்கப்பட்ட பகுதிகள்; அரசாங்கத்தின் நிவாரணத்தைப் பெற்ற பகுதிகள்தான். அந்தப் பகுதிகளை இந்த உயர் மட்டக் குழு பார்வையிட்டதாகத் தெரியவில்லை. அவர்கள் செல்லவில்லை என்றாலும் அரசின் வேளாண்மை அதிகாரிகள் எடுத்த கணக்குகளை வைத்துக்கொண்டு அந்தப் பகுதிகளைச் சரிபார்த்து, அங்கு நிவாரணம் அளிப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவரவர்களே, அலுவலர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் எல்லாப் பகுதிகளையும் சுற்றிப் பார்த்து முழு விவரங்களையும் தெரிவித்திருக்கிறார்கள். உயர்மட்டக் குழு என்பது, அந்தக் குழுவின் எண்ணத்தின்படி சில பகுதிகளைக் கண்டறிந் திருக்கிறார்கள். ஒவ்வொரு பகுதிக்கும் தனித்தனியாகக் கருத்துரு அனுப்பப்படவில்லை; ஒட்டு மொத்தமாகத்தான் பரிந்துரைகளைத் தந்திருக்கிறார்கள். அவைகளையெல்லாம் அரசு ஆராய்கிறது.

திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு பேரவைத் தலைவ ரவர்களே, இந்த வேளாண்மை உயர்மட்டக் குழுவானது பல்வேறு இடங்களுக்குச் சென்று பார்த்து, விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ள பயிர்ச் சேதங்களை ஈடு செய்யும் வகையில்— நிவாரணம் கொடுக்கும் வகையில் அவர்களுக்கு ஏதாவது நஷ்டயீடு அளிக்க வேண்டுமென்று பரிந்துரை செய்திருக்கிறதா? அப்படியென்றால் எந்த அளவுக்கு ஈடு செய்ய வேண்டுமென்று பரிந்துரை செய்திருக்கிறது என்பதை அமைச்சரவர்கள் அறி விப்பார்களா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவரவர்களே, முழுக்க முழுக்க அந்தப் பரிந்துரைகள் விவசாயிகளுக்கு நஷ்டயீடு நிவாரணம் கொடுப்பது பற்றியது. மொத்தம் 14 பரிந்துரைகள்.

சிவகாசி மற்றும் திருத்தங்கல் நகரங்களுக்குக் குடிநீர் வழங்கும் திட்டம்.

500—(*வினா எண். 18627) திரு. வி. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சிவகாசி மற்றும் திருத்தங்கல் நகரங்களுக்குக் குடி நீர் வழங்கும் திட்டம் எந்த நிலையில் உள்ளது?

(ஆ) விரைவில் அத் திட்டத்தைச் செயல்படுத்த அரசு முன்வருமா ?

(இ) அத் திட்டத்தின் மதிப்பீடு எவ்வளவு?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) மற்றும் (ஆ) சிவகாசி நகர் மற்றும் திருத்தங்கல் பேரூராட்சிகளுக்கான குடிநீர் திட்டத்திற்கு ஆயுள் காப்பீட்டுக் கழகக் கடன் உதவி பெற அரசு இடைக்கால (Adhoc) அனுமதி அளித்துள்ளது. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் திட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. அவை அரசின் ஒப்புதல் பெற்றவுடன் செயல்படுத்தப்படும்.

(இ) சிவகாசி நகரக் குடிநீர் அபிவிருத்தித் திட்டத்தின் மதிப்பீடு ரூ. 454 லட்சம் எனவும் திருத்தங்கல் பேரூராட்சிக் குடிநீர் அபிவிருத்தித் திட்டத்தின் மதிப்பீடு ரூ. 109.48 லட்சம் எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

திரு. வி. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, புதிதாகத் திட்டங்களை அறிவித்திருப்பதற்காக மாண்புமிகு அமைச்சரவர்களுக்கும், மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவரவர்களுக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். ஏற்கனவே, விருதுநகரில் ரெகுலர் டிவிஷன் இருக்கிறது. புதிதாக ஒரு டிவிஷனை அமைத்து இந்த வேலைகளைத் துவங்குவதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, புதிதாக டிவிஷன் அமைப்பது என்பதெல்லாம் பரிசீலனை செய்யப்பட வேண்டிய ஒன்று. அது அவ்வளவு சுலபமாக ஆகக் கூடியது அல்ல. ஆனால், இந்தக் காரியங்களை எவ்வளவு விரைவிலே செய்ய முடியுமோ அவ்வளவு விரைவிலே செய்வதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசு எடுக்கும்.

கடம்பூர் பேரூராட்சிக்குக் குடிநீர் வழங்க வேண்டி வந்துள்ள கோரிக்கை.

501—(*வினா எண். 19266) **திரு. மு. அப்பாதுரை :** மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடம்பூர் பேரூராட்சிக்கு சீவலப்பேரி கோவில்பட்டிக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் குடிநீர் வழங்க வேண்டும் என அரசுக்குக் கோரிக்கை வந்துள்ளதா ?